**அபி வெனுவென் அபி நிதியம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அபி வெனுவென் அபி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க

கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான விதத்தில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவிலான ''சிறந்தவாறு திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை நிறுவனம் நடைமுறைப்படுத்துவது அவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணககாய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மீள் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 4,952,742 ஆன கட்டிட நிர்மாண இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 2018 ஆம் வருடத்திலிருந்து நிதியத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாது இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை கடற்படைக்கு கையளிக்கப்பட்டிருந்தன. எனினும் பௌதீகரீதியில் நிதியத்திற்குச் சொந்தமில்லாத இச் சொத்துக்கள் | நிதியத்தினால் நிதி மட்டுமன்றி முழுமையான வீடுகளை நிர்மாணிப்பதற்காக இலங்கை இராணுவத்தின் 4 ஆவது இலங்கை பொறியியல் படைப்பிரிவினரிடம் உள்ள நிலையான சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் தொழிலாளர் தேவைப்படும் மக்களுக்கு படைப்பிரிவினர் மூலம் | பயன்படுத்தப்படாத சொத்துக்களை கையளிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| மேற்படி நிறுவனத்திற்கு கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளின்றி சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக கருதப்பட்டு பெறுமானத் தேய்வு செலவும் இணங்காணப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக இனங்காணப்பட்டிருந்த பெறுமானத் தேய்வு செலவு ரூபா 2,532,065 ஆகும். | உழைப்பு வழங்கப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிர்மாணங்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் சிறிய உபகரணங்கள் 4 ஆவது இலங்கை பொறியியலாளர் படைப்பிரிவினரின் மூலம் வழங்கப்படும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நிதியத்தால் செயற்படுத்தப்படுகின்ற மற்றும் முழு வீட்டுத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட தவணைக் கொடுப்பனவு | 120,441,658 | அத்தொகை குறிப்பிட்ட காலப்பகுதியில் நிதியத்தினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கிடைத்தமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் | பயனாளிகளுக்கான உதவித்தொகை முப்படை மற்றும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்பட்ட உதவித்தொகை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் ஆவணங்களைப் பேணி வருமாறு முப்படையினர் மற்றும் பொலிசாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வழங்கப்பட்ட உதவித்தொகை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | றணஜயபுர வீட்டுத்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் நிலுவை மொத்தத் தவணைப் பெறுமதியில் 57 சதவீதம் அதாவது ரூபா 21,267,000 ஆனது ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. அத்துடன் மீளாய்வாண்டில் 47 வீட்டுப் பயனாளிகளிடமிருந்து வருடத்திற்காக எவ்வித தவணைப் பணமொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | றணஜயபுர வீட்டுத்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் வீட்டுட் பயனாளிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை தவணைட் பணம் அறவிடுவது தொடர்பாக முப்படையினருக்கான பிரிவுகளுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளதுடன், எதிர்காலத்தின் அந் நிலுவை தவணைகள் விரைவில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தப் பிரகாரம் நிலுவைப் பணம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) (ஆ) மற்றும் வழிகாட்டி 04 | ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் நிதியத்தின் முன்னேற்றம் மீளாய்வு செய்ய முடியுமான வகையில் நிதியத்தின் பிரதான பணிகள் தொடர்பாக காலாண்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 ஆம் வருடத்திற்காக அவ்வறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வினால் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல் பிரகாரம் எதிர்வரும் காலாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் அவ்வறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. | 01/2020 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) (ஆ) மற்றும் வழிகாட்டி 04 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877 (2) (ஈ) பிரிவு | நிதியத்தினால் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்று அறிக்கையொன்று அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதி ஒன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வினால் வழங்கப்பட்டிருந்த அறிவுறுத்தல் பிரகாரம் காலாண்டு அறிக்கை எதிர்வரும் தயாரிக்கப்பட்டு காலாண்டு முடிவடைந்து 15 நாட்களுக்கு முன்னர் அவ்வறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) (ஈ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877 (2) (ஆ) | நிதியக்கட்டுப்பாட்டு அதிகார சபையால் வருடாந்த வரவு செலவுத்திட்டம் நிதியத்தின் நோக்கத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு உறுதியான அங்கீகாரத்துடன் செப்டெம்பர் 30 இற்கு முன்னர் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ள போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டள்ளதுடன் , நி.பி 877 (1) (ஆ) பிரிவின் பிரகாரம் வரவு செலவுத்திட்டம் பொது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படுவதற்காக எதிர்வரும் வருடத்திலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும். | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877 (1) (ஆ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற நிதிய முகாமைத்துவச் சேமிப்புக் கணக்கில் 2021 ஆம் வருடத்தில் ரூபா 14.5 மில்லியன் தொடக்கம் ரூபா 60.9 மில்லியன் வரையான வீச்சில் மீதியொன்று காணப்பட்டு வருவதுடன் மிகை நிதியம் பொருத்தமான குறுங்கால முதலீடுகளில் வைப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீட்டுத் திட்டத்தின் பயனாளிகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக பிடித்து வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்தந்த சந்தர்ப்பங்களில் கொடுப்பனவிற்கு தேவையான அளவு தொகையொன்று மட்டுமே கணக்குகளில் பேணப்பட்டு வருகின்றது. | நிதியத்தின் திட்டமிடப்பட்ட பணிகளுக்கான தேவைப்பாடு மதிப்பிடப்பட்டு மிகை நிதியம் முதலீட்டிற்காக திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நிதியத்தினால் பேணப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்கில் 2021 ஆம் வருடத்தில் சராசரி மாதாந்தப் பெறுவனவுகள் ரூபா 51,434 உம் சராசரி மாதாந்தக் கொடுப்பனவுகள் ரூபா 13,434 உம் ஆக இருந்தமையால் ரூபா 2.1 மில்லியன் சராசரி மாதாந்த மீதியொன்று மீளாய்வாண்டில் பேணப்பட்டு வந்தது. | இந்தக் கணக்கிலிருந்து றணஜயபுர வணிக வளாகத்தில் நீர் மற்றும் மின்சாரப் பட்டியல் செலுத்துதல், வைப்புத் தொகை தீர்வு செய்யப்படுகின்றமை, திருத்த வேலைகள் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அக் கணக்கில் நிதி குறுங்கால முதலீடுகளில் வைப்புச் செய்வதற்கான வாய்புக் கிடைக்கவில்லை. | நிதித் தேவைப்பாடு மதிப்பிடப்பட்டு மிகை நிதியம் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 26,231,498 ஆன மிகை என்பதுடன் அதற்கொத்த எதிராக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 49,050,324 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 75,281,822 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம்முன்னேற்றத்திற்கு செயற்திட்ட அபிவிருத்திச் செலவுகள் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தினால் பகுதி, வீட்டுத்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 299 வீடுகளுக்காக ரூபா 209,742,767 ஆன உதவித் தொகையொன்று 03 தவணைகளின் கீழ் செலுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் 02 வீடுகளுக்காக முதலாவது தவணையாக ரூபா 448,833 மட்டுமே செலுத்தப்பட்டிருந்ததுடன் எவ்வித வீடொன்றுக்காகவும் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. எனவே வருடாந்த திட்டத்தின் பிரகாரம் எதிர் பார்க்கப்பட்ட நிதிச் செயலாற்றல் மற்றும் பௌதீக செயலாற்றல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2020 ஆம் வருடத்தில் செயற்படுத்தப்படுகின்ற பகுதி வீட்டுத் திட்டம் கொவிட் 19 தொற்று நோய் காலாண்டு வரை நிலவியதால் 2021 ஆம் வருடத்திற்காகன வீட்டுத் திட்டத் திட்டத்தின் நடவடிக்கைகள் சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வந்தமையால் வருடத்திற்குள் எவ்வித வீடொன்றுக்காகவும் இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைகள் செலுத்தப்பட்டிருக்க வில்லை. எனவே எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்ததுடன், இந் நிலைமை செயற்திட்டத்தின் செயற்திறனின்மை அல்ல என்பதை தெரிவிக்கின்றேன். | எதிர் பார்த்த நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் மட்டத்தினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) முழுமையான வீட்டுத் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 27 வீடுகளுக்காக 3 தவணைகளில் ரூபா 43,065,000 உதவித் தொகை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் வருடத்தில் ஒரு வீட்டிற்காக 03 தவணைகளும், 02 வீடுகளுக்காக 02 தவணைகளும், ஒரு வீட்டிற்காக ஒரு தவணையும் ஆக ரூபா 3,985,000 மட்டுமே செலுத்தப்பட்டிருந்தது. அவ் வருடத்திற்குள் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பணத்தின் சதவீதமாக எடுக்கும் போது 9 சதவீதமானது மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | 2020 ஆம் வருடத்தில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு விதிக்கப்பட்டமையால் கட்டிடப் பொருட்களைப் பெறுவதில் உள்ள சிரமங்கள் காரணமாக நிர்மாணம் குறித்த காலத்திற்குள் முடிப்பதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் அவ்வீட்டுத் திட்டம் 2021 ஆம் வருடத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் மட்டத்தை அடைவதற்கு முடியாதிருந்ததுடன், இந் நிலைமை திட்டத்தின் செயற்திறனின்மை அல்ல என்பதை தெரிவிக்கின்றேன். | திட்டமிட்டபடி செலுத்தப்பட்ட உதவித் தொகையில் எதிர்பார்த்த செயலாற்றல் மட்டத்தை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதியச் சட்டத்தின் 11(6) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை நிதியத்தின் தொடக்கத்திலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பிரகாரம் எதிர்வரும் வருடத்தில் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2008 இன் 06 ஆம் இலக்க அபி வெனுவென் அபி நிதியச் சட்டத்தின் 11(6) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 877(2)(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 04 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டு எல்லை மற்றும் உள்ளபடியான எல்லைகள் இணக்கப்பட்டு முரண்களுக்கான காரணங்களுடன் பாதீட்டு இணக்கக்கூற்று நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2021 ஆம் வருடத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இதற்கு முன்னைய கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் நி.பி 877 ஏற்பாடுகளின் பிரகாரம் இதற்கு முன்னரான அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான எல்லைகள் ஒப்பிடப்பட்டு முரண்களுக்கான காரணங்களுடன் வரவு செலவுத் திட்டம் இணக்கக்கூற்று எதிர்வரும் கணக்காய்வு வருடத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாணம் 877(2)(ஆ) இன் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டி இலக்கம் 04 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |